76

# சுடர்




உலக மக்கள் படிக்கும் சராசரிப் பக்கங்கள் 2000.
இந்திய சராசரி 32 பக்கங்கள்.
தமிழர் 25 பக்கங்கள் (அதிலும் 18 பக்கங்கள் பாடப் புத்தகங்கள்)
தமிழில் வெளியாகும் ஜனரஞ்சக நாவல் கூட
1200 விற்பதற்கு
3 வருடங்கள் ஆகின்றன.


• மாத இதழ்
• ஜூன்'87 • 80 காசு



FREE E - BOOKS , www.thamizham.net.,

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவனுக்கொரு குணமுண்டு

**வீரம்**

பெங்களூரில் பட்டப்படிப்பு தேர்வு எழுதிய நாகராஜ் காப்பியடித்ததாகக் கூறப்படுகிறது. இதனைக் கண்டுபிடித்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியை அந்த மாணவர் தாக்கிவிட்டு தலைமறைவானார்.

(08—05—87)

**நேர்மை**

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் திருக்கல்யாணம் நடந்தபோது 15பவுன் நகைகள் பறிக்கப்பட்டன. மதுரை தெற்கு வாசலைச் சேர்ந்த செல்லையா என்பவரின் மனைவியான செல்லம் (48) என்பவர் தீபாராதனையின் போது, தனது கையை உயர்த்தி ஆண்டவனை தரிசனம் செய்யும் சமயத்தில் தனது 15 பவுன் நகைகளை பறிகொடுத்தார்.

(13—05—87)



**தன்னம்பிக்கை**

ஆறுமுக வைத்தியர் தெருவைச் சேர்ந்தவர் கோவிந்தசாமி. இவருடைய மகள் காஞ்சனா (வயது12) ஏழாம் வகுப்பு பரீட்சையில் பாஸ் செய்யவில்லை. இதனால் மனம் உடைந்த காஞ்சனா தனது உடலில் மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்துக் கொண்டார்

(11—05—87)

**கருணை**


குடியிருக்கிற வீட்டு வாடகை சம்மந்தமாக வீட்டுக்காரருக்கும், குடியிருந்தவர்களுக்கும் தகறாறு ஏற்பட்டது. இதனால் வாடகை வாங்கும் பொறுப்புள்ளவர் வீட்டுக்குத் தீ வைத்தார். இதனால் இருவர் காயமடைந்தனர். இரண்டு குழந்தைகள் கருகி இறந்தன.

(20—05—87)

செய்திகள்; தினமணி.



FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,

# எம்.ஜி.ஆர் செல்வாக்கின் காரணங்கள்

**தாய்ப் பாசமும், கவர்ச்சியும்**

எம்.ஜி.ஆருக்கும், அவரது தாயார் சத்யா அம்மை யாருக்கும் இடையிலான அன்பு பிரசித்தி பெற்றது. எம்.ஜி.ஆர் தனது சினிமாக்களிலும் தாயன்புக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார். எம்.ஜி.ஆரை தனது மகன் போல் கருதி மகிழ்ச்சியடையும் பெண்மணிகள் தமிழகமெங்கும் நிறைந்தது இக்காரணத்தினால்தான்.

எம்.ஜி.ஆர் தனது சினிமாவில் காதலை சித்தரித்த விதம் மிகவும் முக்கியமானது. பெண்கள்தான் எம்.ஜி.ஆரை காதலிப்பர். எம்.ஜி.ஆர் ஒரு பெண்ணை ஏற்றுக்கொண்டு பிறரை தங்கையாக பாவிப்பார். தனது உடல் வலிமையினால் சிக்கலில் உள்ள பெண்களை மீட்பார். எம்.ஜி ஆர் எந்தப் படத்திலும் கற்பழிப்புக் காட்சியில் நடித்ததில்லை. மதுவோ சிகரட்டோ குடித்த தில்லை. கவர்ச்சியான முகத்தாலும், வயது தொரியாத உடல் வாகாலும் எம்.ஜி.ஆரின் மேல் பெண்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

**சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தியாக எம்.ஜி.ஆரை மக்கள் எண்ணியது**

எம்.ஜி.ஆர் என்ற தனிமனிதன் தனது வலிமை யினால் சமூகத்துக்கு நன்மையளித்தல் எம்.ஜிஆர் சினிமாக்களில் வலியுறுத்தப்படும். எம். ஜி ஆர். பணக் காரனாகத் தோன்றி ஏழைகளை ஆதரித்தல், அல்லது ஏழையாகத் தோன்றி பணக்காரர்களை எதிர்த்தல் போன்றவற்றால் ஏழை மக்கள் சினிமா எம். ஜி. ஆரை தங்கள் தலைவனாக மதித்தார்கள். படங்களில் காட்டி வந்த *IMAGE* வெளியிலும் மாறுபடாத வகையில் காட்டி வந்தார். தீவிபத்தில் வீடிழந்தவர்களுக்கு நன்கொடை அளித்தது, மழையில் நனைந்த ரிக்ஷாக்காரர்களுக்குக் கோட்டு அளித்தது... இதனால் ஏழையின் நண்பனாக வெளியிலும் பார்த்தார்கள்.

**வாழ்க்கை நிலை**

1967 ஆம் ஆண்டு எம். ஆர். இராதா எனும் நடிகர் எம். ஜி. ஆரைச் சுட்டார். எம். ஜி. ஆரின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்ச்சி மக்களிடையே மிகப்பெரிய அனுதாபத்தையும் ஏற்படுத்தியது.




FREE E - BOOKS , www.thamizham.net.,

## திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உறவு

கருணாநிதி மரபில் தோய்ந்த தமிழைக் கொண்டு எழுதிய சினிமா கதைவசனங்கள் தமிழ் பண்டிதர்களை, கல்லூரி மாணவர்களை ஈர்த்தது. எம். ஜி. ஆரோ சினிமா ரசிகர்கள் மத்தியில் புகழ்பெற, *VISUAL MEDIUM* என்கிற அளவில் முழுமையாக சினிமாவைப் பயன்படுத்திக் கொண்டார். தி.மு.க. எம்.ஜி.ஆரை பயன்படுத்திக் கொண்டது மாதிரி, இவரும் தி.மு.கவை பயன்படுத்திக் கொண்டார்.

மேற்கண்ட முறைகளில் வளர்த்துக் கொண்ட *IMAGE*ஐ பயன்படுத்தி ஆட்சியையும் பிடித்துவிட்டார் எம். ஜி. ஆர். தனது பிம்பத்தை அதிகப்படுத்திக் கொள்ளவும், குறையாமல் காக்கவும் பலவித தந்திரங்களை கடைபிடிக்கிறார்.

ஆதாரம்: ஞான ராஜசேகரனின் படிகள் கட்டுரை.




**மாதம் ரூ. 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாசிட் (*FIXED DEPOSIT*) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு விருக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

தொடர்புக்கு

மலர்ச்சி நிதி

AP 638, அண்ணா நகர், சென்னை - 600 040.

ADVT




FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுநீரில் இருக்கும் பொருட்களை, சோதனைக் கூடத்தில் பரிசோதித்து, நமது உடல் நிலையை மருத்து வர்கள் அறிகிறார்கள். சர்க்கரை இருந்தால், நீரிழிவு நோய் என்றும், புரதம் இருந்தால் சிறுநீரகக் கோளாறு என்றும். பித்தம் இருப்பின் கல்லீரல் வேலை செய்ய வில்லை யென்றும், சீழ் இருந்தால், சிறுநீர்பாதை கிருமிகளால் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

ஒரு நாளைக்கு ஒரு சராசரி மனிதர் 50 அவுன்ஸ் சிறுநீர் கழிய வேண்டும். நீர் அருந்தல் மற்றும் தட்ப வெட்ப நிலைக்கேற்ப இது சற்று முன்பின் ஆக இருக்க லாம், ஆனால் மிகுந்த வேறுபாடு இருப்பின் மருத்து வரைப் பார்பது நல்லது.

சிறுநீர் கழியும் போது, அதன் நிறத்தைக் கொண்டு நாம் எச்சரிக்கை அடைய கீழ்க்கண்ட விவரம் தரப்படு கிறது:

| | |
|---|---|
| வைக்கோல் நிறம் | — நல்ல உடல் நிலை |
| நிறமற்று அல்லது மிக மங்கலாக | — நீரிழிவு நோய் |
| தவிட்டு நிறம் அல்லது சிவப்பு | — சிறுநீரில் இரத்தம் |
| புகை நிறம் | — சிறு அளவு இரத்தம் |
| ஆரஞ்சு நிறம் | — மஞ்சட்காமாலை/ காய்ச்சல்/கடும் உழைப்பு |
| ஆழ்ந்த மஞ்சள் நிறம் | — கல்லீரல் கோளாறு |
| பால் நிறம் | — கொழுப்பு, சீழ், குடற்பால் |
| நீலம் | — டைபாய்டு/மெதலீன் நஞ்சு உள்ளது |
| பச்சை | — அதிக பித்தம்/கார்பாலிக் அமிலம் அல்லது தார் உள்ளது |
| கருப்பு | — கல்லீரல் கோளாறு/அதிக அளவு தார் பொருட்கள் நுழைந்துள்ளன. |

இந்த அடையாளங்களை முடிந்த முடிவாகக் கொண்டு அஞ்சாமல், எச்சரிக்கையாக ஏற்று உடன் மருத்துவரை அணுகி தெளிவு பெறுதல் அவசியம்.

— சித்தன்

[அடுத்து நமது கண் வழி மருத்துவம்]

நமது சிறுநீர் மருத்துவம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி வாசகர் இயக்கக் குடந்தை கிளைக் கூட்டம் 08:05:87 வெள்ளி மாலை 7 மணியிலிருந்து 8-30 வரை நடந்தது. இடம்: சாது சேஷையா ஓரியண்டல் நூலகம். சுட்டி வாசகர்களாகிய பிருந்தாசாரதி, இரா. மயில்சாமி, வசந்தகுமார், R. வடிவேலு, விஜயாலயன், ராஜசேகர் போன்றோர் கலந்து கொண்டனர். சுட்டியை மக்கள் மத்தியில் பரவலாக்க தீவிர முயற்சி மேற்கொள்ள இருப்பதாக அனைவரும் கூறினார்கள்.

அவர்கள் பேசியதிலிருந்து சில:

பிருந்தா சாரதி: சுட்டி ஒரு ஜனநாயக பத்திரிகை. சுட்டியில் வரும் பல விஷயங்கள் மாதம் முழுவதும் பேசத் தூண்டுகின்றன. பிரமிட் மருத்துவம் போன்ற விஷயங்கள் பயனுள்ளவை. சுந்தர ராமசாமி பக்கம் அற்புதம். சின்ன சைஸில் நிறைய செய்திகள் இருந்தன. இப்போது குறைந்து விட்டது. லே அவுட் வளர்ந்து வருகிறது. புத்தக விமர்சனம், பதில்கள் பகுதிகள் தொடரலாம்.

சுருக்கமாக... சுட்டி ஓர் அறிவு ஜன்னல்.

இரா. மயில்சாமி: ஏழாம் பக்கத்தில் காலைப்பார், எழுபதாம் பக்கத்தில் இவர் யார் என்று போய்க் கொண்டிருக்கும் பத்திரிகை உலகத்தில் இவற்றையெல்லாம் எட்டி உதைத்துவிட்டு கெட்டியான இடத்தைப் பிடித்திருக்கும் சுட்டி பாராட்டுக்குரியது. சுட்டியில் காதல் கவிதைகளே வருவதில்லை. காதல் என்றால் கசக்கிறதா?

வசந்தகுமார்: அட்டைப் படத்தில் கவனம் தேவை. கார்டூன்கள் சில சமயம் கசமுசாவென்றிருக்கின்றன. சுட்டியின் + POINT கார்டூன்கள்தானே! நல்ல தரமான காதல் கவிதைகளை வெளியிட்டால் தவறில்லை.

J. ராஜசேகர்: கருத்துகளை மென்மையாக வையுங்கள். கடுமையாக வைக்கும் பட்சத்தில் எதிர்க்கத்தான் தூண்டுகிறது.

வடிவேலு: நேரடியாக இன்வெஸ்டிகேஸன் செய்து சுட்டியில் கட்டுரைகள் வெளியிட வேண்டும்.

★ஆரணி போன்ற ஊர்களிலும் வாசகர் இயக்கக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. மற்ற ஊர்களிலும் விரைவில் வாசகர் இயக்கக் கூட்டம் நடத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். கூட்டம் நடந்த விபரம், பேசப்பட்டவை, செய்யப்பட்டவை போன்றவற்றை உடனே எங்களுக்கு எழுதவும்.

இயக்கத்தில் இணைந்தவர்கள் பதிய உறுப்பினர் சேர்ப்புப் பணியைத் தீவிரப்படுத்தவும். விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலட்டையில் தொடர்பு கொள்ளவும்.

FREE E-BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை



காயிதே மில்லத் (தமிழ் மாத இதழ்) எட்டாம் ஆண்டு சிறப்பு மலர் (35.00) — ஆசிரியர் கா. மு. ஆதம் 227, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001 Ph: 517371.

பகத்சிங்கும் இந்திய அரசியலும் (18.00) சுப. வீரபாண்டியன் — கனிமுத்துப் பதிப்பகம், 727, அண்ணாசாலை, சென்னை-600 006.

திருக்குறள் (மூலம்) (3.50) — பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 001.

புரட்சிப்பூக்கள் — கவிதைத் தொகுப்பு (3.00) இலக்கிய வட்டக் கவிஞர்கள் — இலக்கிய வட்டம், மனை 386, 27-வது தெரு, 6-வது பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600 078.

சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து (7.90) திரு. வி. கலியாணசுந்தரனார் — பூம்புகார் பதிப்பகம், 63, பிராட்வே, சென்னை-600 108.

தமிழ் மூலம் தெலுங்கு பாஷை (7.00) B. விஸ்வேஸ்வரராவ் — வாணி புக் டிப்போ, 3, மலைய பெருமாள் தெரு, சென்னை-600 001.

ஆரோக்கியமாய் வாழ (5.00) சீனிவாசன் கலா நிலையம், 244, இராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை-600 004.

வாசனைப் பூக்கள் — சிறுகதைத் தொகுப்பு (1.00) அவனியாபுரம் கே. கே. சுரேந்திரன் ஹேலா பதிப்பகம், 5, பிரசன்னா காலனி, 7-வது தெரு, அவனியாபுரம், மதுரை-625 012

போரும் வாழ்வும் — கட்டுரை (1.00) இன்குலாப் தொடர்புகளுக்கு: — A-3, பூபதி நகர், சென்னை-600 024

சிந்தனையாளர் எமர்ஸன் (4.50) சிங்காரவேலு பிரேமா பிரசுரம், 35, ஆற்காடு சாலை, சென்னை-600 024.

சின்னக் குருவியின் சூரிய வாழ்த்து! உரை வீச்சு (2.50) பெரியார்தாசன், வீயெஸ் பதிப்பகம், 31, முத்தியப்ப தெரு, செனாய் நகர், சென்னை-600 030.

FREE E - BOOKS , www.thamizham.net .,

# கரிச்சான் குஞ்சு கூறுகிறார்

? திறனாய்வாளருக்கும், படைப்பாளருக்கும் என்ன உறவு இருக்க வேண்டும்...?

! உறவே இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் விமர்சனத்தின்போது விடை குறைந்துவிடும்.

? எழுத்தாளருக்குக் குறிப்பிட்ட கொள்கை அவசியமா ?

! ரொம்ப அவசியம். அவர் அதற்காகவே எழுதக் கூடாது. கலை அழகு குன்றாமல் எழுத வேண்டும்.

? நல்ல சிறுகதையின் இலக்கணம் என்ன?

! அது இலக்கணத்துக்குக் கட்டுப்படாதது. ஆனால் குறிப்பிட்ட கதை, அழகுடன் கலைபிரியாமல் ஒருமைப்பாடு கொண்டு நல்ல உருவம் அமைவது சிறப்பு.

? இக்கால இலக்கிய வடிவங்களில் நீங்கள் எதை தேர்ந்தெடுக்கிறீர்கள்?

! சிறுகதையைத்தான்.

? தொடர்கதை — நாவல் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

! நல்ல நாவல் தொடர்கதையாகவும் வரலாம். ஆனால் இன்றைய தொடர்கதைகள் நல்ல நாவலாக அமைவதில்லை. அடுத்து என்ன வரப்போகிறது என்ற எதிர்ப்பார்ப்புக்காகவே 'சஸ்பென்ஸ்' வைத்து எழுதுகிறார்கள். எனவே, நாவலின் கட்டுக்கோப்பு குலைகிறது.

? புத்தக வெளியீட்டாளர்கள் பற்றி ...

! அத்தனை பேரும் புல்லுருவிகள்.

? உங்கள் படைப்புகள் பரவலாக அறியப்படவில்லை என வருந்தியதுண்டா?

! என்றைக்குமே எனக்குப் பரவலாகப் புகழ் இருந்ததில்லை. ஒரு வருத்தம் உண்டு. நான் எழுத்தாளனாகவே வந்திருக்க வேண்டாம். அங்ஙனம் வந்து பெற்றது என்ன என்ற வருத்தம் உண்டு.

பேட்டி: சா. பாண்டியன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சென்ற வருடம் ஜெயகாந்தனுக்குக் கிடைத்த ராசராசன் விருது (ரூ1லட்சம்) இந்த ஆண்டு கோவி.மணிசேகரனுக்குக் கிடைத்துவிட்டது. எனவே கோவி ஜே. கே-யாக முயல்கிறார். எல்லாமே 'நான்' என்கிறார். அண்மையில் கர்வம் தலைக்கேறிய அவரது தொலைக் காட்சி பேட்டியைக் கண்டு பலரும் அறுவறுத்தார்கள்.

இலக்கியத்தில் ஏதோ புரட்சி செய்து விட்டதாக தனது முதுகை தானே தட்டிக் கொள்கிறார். சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டதாக பொன்னாடை போர்த்திக் கொள்கிறார்,

# கோவி. ஜே.கே. ஆகிறார்



'பரிசை எதிர்பார்த்து தமிழ்பணி செய்பவன் நானில்லை' இது கோவியார் கூற்று. இந்த பிருமாண்டமான பொய்யின் மூலம் உண்மையின் மீது கடுமையான தாக்குதல் நிகழ்த்தியிருக்கிறார். அன்பான கோவி அவர்களே! கல்கியில் 'மாண்புமிகு முதல்வர்' தொடர் கதை எதனை எதிர்பார்த்து எழுதப்பட்டது? பரிசு கொடுத்ததற்காக எம். ஜி. ஆருக்கு நீங்கள் நன்றி பாராட்டுங்கள். அதற்காக எம்.ஜி. ஆரையும் சேக்கிழாரையும் ஒப்பிடுகிறீர்களே! இதனால் உங்களது இலக்கியசரித்திர அறிவை சந்தேகப்படுகிறோம். ஒரு வேளை இவர்களை ஒப்பிடுவதன் மூலம் தனித் தனியாக இருவரையும் அவமானப்படுத்த எண்ணியிருக்கலாம்.

சுயமரியாதை எழுத்தாளரைப் போல வெளிக் காட்டிக் கொள்ளும் இவர் திரை மறைவில் நாணிக் கோணி வளைந்து வாழ்கிறார். பதிப்பகங்களிலும் பத்திரிகை அலுவலகங்களிலும் ஒரு நம்பிரமான அடிமையைப் போல செயல்படுகிறார். தொடர்கதைக்கு போஸ்டர் போட வேண்டும், விளம்பரம் செய்யவேண்டும் என்று பத்திரிகைக்காரர்களை வலியுறுத்தி விளம்பரம் தேடுகிறார்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பரிசு சீட்டு பற்றி லெனின்

என்னிடம் 50 ரூபாய் மதிப்புள்ள பசு ஒன்றிருப்பதாக வைத்துக் கொள்வோம். பரிசுக் குலுக்கல் மூலமாக அதை நான் விற்க விரும்புகிறேன். ஆகவே நான் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய்க்கு ஒரு சீட்டு கொடுக்கிறேன். ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய்க்கு அந்தப் பரிசைப் பெறும் வாய்ப்பிருக்கிறது என்று மக்களுக்குக் காட்டப்படுகிறது. ரூபாய்கள் குவிகின்றன. நூறு ரூபாய் சேர்ந்தவுடனே நான் பரிசுச் சீட்டை குலுக்குகிறேன். குலுக்கி எடுத்ததில் யாருடைய சீட்டு வருகிறதோ அவர் ஒரு ரூபாய்க்கு பசுவைப் பெறுகிறார். மற்றவர்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. மக்களுக்கு பசுவின் விலை ''மலிவானதா''? இல்லை. அதன் விலை மிகவும் அதிகம். ஏனெனில் அவர்கள் கொடுத்த மொத்தப் பணம் பசுவின் மதிப்பை விட இரு மடங்காகும். இரண்டு பேர் (பரிசுக் குலுக்கல் நடத்தியவரும், பசுவைப் பெற்றவரும்) எந்த உழைப்பையும் செலவழிக்காமல் லாபம் பெற்றனர். தொண்ணூற்று ஒன்பது பேர்கள் பணம் இழந்ததால், இவர்கள் லாபம் அடைந்தனர். ஆகவே மக்மளுக்கு பரிசுச் சீட்டுகள் நற்பயன் தருவதாகச் சொல்கிறவர்கள், இப்படித் தான் மக்களை ஏமாற்றுகிறார்கள்.

'நான் முழு ஆற்றலோ, திறமையோ பெற்றுவிட்டதாக எனக்குத் தெரியவில்லை' என்று இவர் ராணி பேட்டியில் கூறியது மேடை அடக்கத்திற்காக அல்ல. அது தான் உண்மை.

ராஜராஜன் விருது, சுத்தானந்த பாரதிக்கு கொடுக்கப்பட்டதால் கேவலப்பட்டது. ஜெயகாந்தனுக்கு தந்த போது இருபது சதவீத கௌரவம் பெற்றது. மீண்டும் தலை தாழ்ந்து விட்டது.

ராஜராஜன் விருதின் தரம் மிகவும் இப்போது கவலைக்கிடமாக இருக்கிறது, போகட்டும்.

கோவியாருக்கு என்ன தகுதியிருக்கிறது?
ஆயிரக்கணக்கான பக்கங்கள் சரமாரியாக எழுதிக் குவித்துவிட்டார் என்பதைத்தவிர.

— நா. தென்னிலவன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## எதற்காக எழுதுகிறீர்கள்.........?

எதற்காக எழுதுகிறேன் எனும் கேள்வியை எழுப்பிக் கொள்கிறேன். லகுவாக அதற்குப் பதில் கிடைக்குமென்று தோன்றவில்லை.

படிக்க வேண்டிய காலத்தில் படிக்காத மாணவனும், சம்பாதிக்க வேண்டிய காலத்தில் சம்பாதிக்காத இளைஞனும், மலடியான மருமகளும்—அவர்களுக்கு வேறு தகுதிகள் ஆயிரம் இருக்கட்டும்—குடும்பங்களில். அவர்களுக்குரிய அந்தஸ்தைப் பெற முடியாது. நான் முதல் வகுப்பிலிருந்து பள்ளிப் படிப்பு முடிப்பது வரையிலும் கடைசி பெஞ்சு மாணவனாகவே இருந்து வந்திருக்கிறேன். என் பள்ளி வாழ்க்கையில் பக்தி சிரத்தையோடு நாலு வரிகள் உருப்போட்ட நினைவு எனக்கில்லை. இதன் விளைவாக குடும்பம் என்னை அசடு என்று முத்திரை குத்திற்று. அப்பொழுதுஅந்தப் பட்டம் கனகச்சிதமாது பொருந்தும்படியாகவே நான் இருந்தேன்—குறைந்த பட்சம் வெளி உலகிற்கேனும். எனது துரதிர்ஷ்டம் என்னுடன் படித்துவந்த என் சகோதரி படிப்பில் கன சூட்டிகையாக வந்து வாய்த்தாள். அவளோடு ஒப்பிட்டுப் பேசப்படும் சங்கடங்களுக்கு நான் ஆளானேன்.

# சுந்தர ராமசாமி

நான் முட்டாள் அல்ல என்பதை நிருபித்து என் தந்தையை ஒப்புக்கொள்ளச்செய்துவிட வேண்டும் என்பதற்காகவே எழுத ஆரம்பித்தேன். அவர் மதிக்க நிர்ப்பந்திக்கப்படும் ஒரு புத்திசாலி உலகம் என்னைக் கொண்டாடும் நாட்களை உருவாக்கி அவரை அசடு வழியச் செய்துவிடவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதோடு என் எழுத்தில் மயங்கி அழகிய ரசிகைகள் யாரேனும் வலிய வந்து என்னைக் காதலிக்கக்கூடும் என்ற நப்பாசையும் எனக்கு இருந்தது.

எனக்கே முற்றிலும் தெளிவாகாத ஒரு இயற்கைத் தாகம்தான் இன்றும் என்னை எழுதத் தூண்டுகிறது எனத் தோன்றுகிறது. ஒருவிதத்தில் இதைத் தவிர வேலை எதுவும் மேற்கொள்ள என்னால் ஆகாது என்றும் சொல்லலாம். ஒரு வியாபார ஸ்தாபனத்தின் தமிழ்க் கடிதப் போக்குவரத்தைக் கவனித்தல், ஓர் இலக்கியப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருத்தல், கவுரவமான குடும்பம் ஒன்றில் காரோட்டியாக வேலை பார்த்தல், ஐந்து வகுப்பு



FREE E - BOOKS , www.thamizham.net.,




★ விபச்சார தடைச்சட்டம் (1956) விபச்சாரத்தில் ஈடுபடும் ஆணும் தண்டிக்கப் படவேண்டும் என்று கூறுகிறது. ஆனால் பொதுவாக நீதி விசாரணை அதிகாரிகள் பெண்ணை மட்டும் தண்டிக்க விரும்பி விபச்சாரத்தில் ஈடுபடும் ஆணை சாட்சி சொல்பவராக எடுத்துக்கொள்கின்றனர். இது போன்ற நடைமுறையினால் விபச்சார தடைச்சட்டத்தின் கீழ் ஆண்கள் குற்றம் செய்திருந்தாலும் பெரும்பாலும் தப்பி செல்கின்றனர். இது பெண்களுக்கு எதிராக நடைமுறைப் படுத்தப்படும் வேற்றுமை காட்டலாகும்.

★ வரதட்சணை தடுப்புச் சட்டத்தில் (1961 ஆம் ஆண்டு சட்டம்) கூறப்பட்டுள்ள விளக்கத்தின்படி பாதிக்கப்பட்ட நபர் மாநில அரசின் அனுமதி பெற்றபின்தான் நீதி மன்றமானது அவரது வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இவ் விதிமுறை அனாவசியமான தாமதத்தை விளைவித்து "காலம் கடந்த நீதி, நீதி மறுக்கப்படுதலே" எனும் நீதிக் கோட்பாட்டை வலுப்படுத்துவதாகும்.

வரையிலும் குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் எடுத்தல் ஆகிய வேலைகளையும் என்னால் திருப்திகரமாகச் செய்ய முடியுமென்றாலும், எழுதுகிறபொழுது ஏற்படுகிற ஒரு 'அட் ஹோம்' உணர்ச்சி எனக்கு வேறு வேலைகளில் ஏற்படுவதில்லை. வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும் பொழுது எனது மூர்த்திகரம் சிந்திச் சிதறுவதாகத் தோன்றுவதாலும், எழுத்தில் குவிந்து தன்னம்பிக்கையையும் ஆத்ம திருப்தியையும் ஏற்படுத்துவதாலும் இயற்கை இந்த ஒரு வேலைக்கே என்னைத் தயார் செய்திருக்கிறதோ என எண்ணிக்கொள்கிறேன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



கல்லூரி மாணவர்கள் அரட்டை அடிப்பார்கள் சிகரெட் பிடிப்பார்கள். கலாட்டா பண்ணுவார்கள் — இப்படித்தான் அவர்கள் மீது விமர்சனங்கள் பெரும்பாலும் வைக்கப்படும். ஆனால் சில மாணவர்கள் ஏதேனும் சாதிக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறார்கள்.

சமீபத்தில் 11 பேர்கொண்ட குழு ஒன்று 200 கி. மீக்கு மேல் காட்டு வழிகளிலும், மலைகளிலும் 6 நாட்கள் நடந்து சென்று மக்களை சந்தித்திருக்கிறது.

அருள்கண்ணன், சுப்பிரமணி, அலெக்ஸ், அமுதன், ரமேஷ். கணேஷ், ஜெய்குமார், மீனாட்சி சுந்தரம், சந்தோஷ், . விசுவநாதன், புருஷோத்தமன்...ஆகியோர் கொண்ட குழுவை சந்தித்தபோது—

''இந்த கோடைவிடுமுறையை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முடிவெடுத்தோம். அதன்படி கொடைக்கானலுக்கு அருகிலிக்கும் மலை கிராமங்களாகிய வெள்ளக்கவி, கும்பகஸ்ர, பேரிஜாம், மாரியம் ஷோலா, முன்னவனூர், கூக்கல், பூம்பாறை போன்ற ஊர்களுக்கு நடந்தே சென்றோம். கிராம மக்கள் நன்றாக எங்களை வரவேற்றார்கள். அவர்களது குறைகளையும், புகார்களையும் எங்களிடம் கொடுத்தார்கள். அதை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம். தமிழ்நாடு சுற்றுலா வாரிய, காட்டிலாகா அதிகாரிகளின் ஒத்துழைப்பு எங்களுக்கு இருந்தது. இந்தப் பயணத்தின் மூலம் நிறைய அனுபவமும், மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டது. விரைவில் நாங்கள் நடந்தே இமயமலைக்குச் செல்வோம். எவரெஸ்ட் மீதும் ஏறுவோம்...'' —இவ்வாறு கூறும் இவர்கள் நம்பிக்கைத் தருகிறார்கள்.

# எவரெஸ்ட் உச்சிக்கும் போகத் தயார்



FREE E - BOOKS , www.thamizham.net.,




## புத்தகப் பிழிவு

டாக்டர் க. ப. அறவாணன் அவர்கள் எழுதிய 'தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்' என்கிற புத்தகம் ஓர் அற்புதமான கருவூலம். கலாசார படையெடுப்புகளின் காரணங்களையும், அதனால் தமிழினத்தின் மீது நேர்ந்த தாக்கத்தையும் பல வேறு அளவீடுகளில் ஆராய்கிறது. மிகத் தெளிவாக, ஆழமாக அதே வேளையில் ஆணித்தனமாய் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலின் கருத்துக்கள் ஒவ்வொருவரின் மூளையிலும் பதிவு செய்யப் படவேண்டும். எனவே, இதன் சில பகுதிகள் சுட்டியில் அவ்வப்போது வெளிவரும்.

**(விற்பனை உரிமை: ஐந்திணைப் பதிப்பகம், 282, பைகிராப்ட்சு சாலை, சென்னை-5. பக்கம் 16+304. விலை ரூ. 25).**

...தமிழ்நாட்டுச் சிற்றூர் மக்களைப் பற்றி கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'சண்டே' என்ற ஆங்கில இதழ் (18-24 Jan'87) பின்வரும் கேவலத்தைப் பதிவு செய்திருக்கிறது. தமிழ்நாட்டு நடிகர் உருவம் பொறித்த சுவரொட்டிகளைச் சிற்றூர்ப் பெண்கள் ஓர் இரவில் அதன்மேல் படுத்து உறங்குவதற்காக ஒரு ரூபாய் வாடகைக் கொடுத்துப் பெறுவதற்குப் போட்டியிடுகிறார்களாம்.

திரைப்பட நடிகர், சுற்றுப்பயணங்களிலும், கூட்டங்களிலும் குடிக்கும் சோடா நீரில் எஞ்சியதை ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீருடன் கலக்கி ஒரு குவளை நீர் ஐம்பது காசுக்குத் தமிழகச் சிற்றூர்களில் விற்கப்படுகிறதாம்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மிகுதியான (2500) திரையரங்குகள் உள்ளன. தமிழ் நாட்டில்தான் மிகுதியான சாராயக் கடைகள் இருந்தன. கசாப்புக் கடைகள் உள்ளன. மிகுதியான தொழு நோயாளிகள் உள்ளனர்.

இந்தியாவில் உள்ள இருபத்தைந்து மாநிலங்களில் அச்சாகும் மொத்த இலாட்டரிச் சீட்டுகளில் கிட்டதட்ட 70 விழுக்காடு தமிழ்நாட்டில் மட்டும் விற்பனை ஆகின்றன.

---

ஆசிரியர்: ரு. நாராயண பாரதி, வெளியிடுபவர் : உ. ராமச்சந்திரன், அச்சிடுபவர் : எம். என். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு. சென்னை-600 005.
அலுவலகம்: ... நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS, www.thamizham.net,

# மாலினின்

**அன்பிற்குரிய ஜோதிபாசு அவர்களுக்கு -**
**சற்றுப் பிந்திய ஆனால் ப்ரியமான வாழ்த்துக்கள் !**

வங்கத் தேர்தலில் வாகை சூடியதற்காக மாத்திரம் அல்ல இந்த வாழ்த்து, இந்த தேசத்தின் ஆரோக்கியத்திற்கு அவசியமான ஒரு பணியை செய்ய வரலாறு உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறதே அதற்காகவும்தான்.

ஆம்! பல வருடங்களாக நீங்கள் வங்கத்தில் வெற்றிகரமாக நடத்தி வரும் இடது சாரிக் கூட்டணியை இனி தேசம் முழுக்க விரிவு செய்ய வேண்டிய நேரம் வந்திருக்கிறது இப்போது. நினைத்துப் பாருங்கள்.

இந்த தேசத்தின் எதிர்கட்சிகள் எப்படி இருக்கின்றன. சித்தாந்தத்தின் உந்துதலால் அல்லாமல், தனிமனித காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக நடத்தப் பெறுபவைகளாக, மத பிரதேச மொழி வெறி கொண்டவையாக, விஞ்ஞான பூர்வமான பார்வையற்ற உதிரிக் கட்சிகளாகவே உள்ளன. இதன் காரணமாகவே, இந்த தேசத்து எளிய மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்த ஜனதா பரிசோதனை சிதறிச் சிதைந்தது.

இதன் காரணமாகவே இந்திய ஜனநாயகம் ஒற்றைச் சக்கர சைக்கிளாக சர்க்கஸ் கயிற்றில் ஓடிக்கொண்டிருக்கிறது. என்றைக்கு 'பாலன்ஸ்' தவறுகிறதோ அன்று அது விழுந்து நொறுங்கும்.

இந்த ஒற்றைச் சக்கர அரசியலுக்கு ஒரு உருப்படியான மாற்றுத் தேவை.

காங்கிரஸ் கட்சியிலிருந்து எல்லாவிதத்திலும் — தேசிய உணர்வு தவிர — நேர் எதிரான சித்தாந்தம் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியே அதற்கு இணையான மாற்றாக அமைய இயலும் என்பது தர்க்க ரீதியான முடிவு.

இதை உங்கள் தலைமை சாதிக்கட்டும். மார்க்சீயம் பாராளுமன்ற ஜனநாயகத்தைச் செழுமைப் படுத்தியது என்னும் புதிய வரலாறு இந்தியாவில் எழுதப்படட்டும்.

மிக்க அன்புடன்
மாலன்

**திறந்த கடிதம்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

? சட்டசபையைப் பற்றி உங்கள் கருத்தென்ன?
மகாகவி பாரதியார்: சட்ட சபையார் மனம் போனபடியெல்லாம் சட்டம் போடுவார்கள். அதிலே பல விபரீதங்கள் ஏற்படும்.

? அரசியல் லாபமடைந்த நடிகர்களை பற்றிக் கூறுங்கள்...

அறந்தைநாராயணன்: இப்போது நடிகர்களில் அரசியல் வாதிகள் தோன்றுவது சுலபம். 1947 ஆகஸ்ட் 15க்குப் பின் இந்தியாவில் நடிகன் அரசியல்வாதியாவது சுலபமானது; நஷ்டத்துக்கோ கஷ்டத்துக்கோ அரசியலில் ஈடுபட்ட நடிகன் ஆளாவதில்லை. அதிலும்—ஆளும் கட்சியில் சேருவதால் லாபமே! சம்பாதிக்கிறவரை சம்பாதித்துவிட்டு, சம்பாதித்த கறுப்புப் பணத்தை காப்பாற்றிக் கொள்ள நடிகர்களுக்கு இப்போதுள்ள லாபமான மார்க்கம் அரசியல்தான். எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜிகணேசன், என். டி. ராமாராவ், அமிதாப்பச்சன், ராஜேஷ்கன்னா, பிரேம்நசீர் அரசியலில் லாபமடைந்தவர்களில் சிலர்.




? இறந்தவர்களுக்காக அழுவதுண்டா?

ஜெயகாந்தன்: நான் இறந்தவர்களுக்காக அழுவதே இல்லை. நமக்குத் தெரிந்தவர்கள் எல்லாம் ஒருவர் பின் ஒருவராய் இறந்து போகிறார்கள். இது மனத்துக்கு மிகவும் வருத்தம் தருகிறது. நாமும் இதுபோல் இறந்து போவோம் என்கிற உள்ளுணர்ச்சியே இந்த வருத்தத்துக்குக் காரணம். நான் இறந்தவர்களுக்காக அழுவதே இல்லை. பிரிவுக்காக மனம் வருந்தும். அதுகூட எவ்வளவு அசட்டுத்தனம் என்று உடனே அறிவு கடிந்து கொள்ளும்.

? உங்கள் வெற்றிகளுக்கான பின்னணி என்ன?
முகமதலி: நான் அபாயங்களை தைரியமாக எதிர் நோக்குகிறேன். நான் மது அருந்துவது இல்லை. புகை பிடிப்பது கிடையாது. ஒரு கிண்ணம் சுறுசுறுப்பு, ஒரு டீஸ்பூன், பொறுமை, பெருந்தன்மை, கொஞ்சம் அன்பு, நிறைய சிரிப்பு எல்லாவற்றையும் சேர்த்து கலக்கி வாழ்நாள் முழுவதும் மற்றவர்களுக்குக் கொடுத்தால் பெரிய மனிதர் ஆகிவிடலாம். ●

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆள் 1/4 பங்கு ஆடை 3/4 பங்கு

பஸ்—

வேகம் பிடிக்கவே, நான் சாய்ந்து விடாமலிருக்க முன் பக்க சீட்டின் கம்பியை பத்திரமாகப் பிடித்துக் கொண்டேன். அப்பொழுது அந்த முன்பக்க சீட்டில் தன் கணவருடன் உட்கார்ந்திருந்த ஒரு பெண் இரண்டு மூன்று தடவை என்னை திரும்பிப் பார்த்தாள்.

எதற்காக திரும்பி பார்க்கிறாள்? எனக்குள் கேள்வி எழவே எனது கையோ அல்லது காலோ அவளை எங்காவது தொட்டுக் கொண்டுள்ளதா' என ஒரு தடவை பரிசோதித்துப் பார்த்துக் கொண்டேன்.

இல்லை,

பிறகு ஏன் அப்படி பார்த்தாள்? பார்க்கிறாள்? பஸ் கொஞ்ச தூரம் போன பின்பு—அந்த பெண் தன் கழுத்து நகைகளை ஒரு தடவை சரி பார்த்துக் கொண்டு, முந்தானையை இழுத்து அந்த நகைகளை மூடி மறைத்தாள்.

எனக்கு அப்பொழுதுதான் புரிந்தது, இவள் நம்மை ஒரு திருடனாய் பாவிக்கிறாள் என்ற உண்மை. எனக்கு அப்படியே பஸ்ஸில் எழுந்து நின்று "நான் நல்லவன்" என்று ஓங்கிக் கத்த வேண்டும் போல் இருந்தது.

பிறகு ஸ்டாப்பிங் வரவே இறங்கி வீடு வந்தேன். இந்த சம்பவம் மனசை அறுத்துக் கொண்டிருக்கவே விபரத்தை அப்பாவிடம் சொன்னேன்.

அவர் சொன்னார், "அவள் சந்தேகப் பட்டதுல தப்பு இல்ல... காரணம் உன்னோட இந்த டிரஸ்ஸும்—ஹேர் ஸ்டெயிலும்தான்.!"

நான் யோசித்துப் பார்த்தேன்... அப்பா சொன்னதில் தப்பில்லை எந்த விஷயத்தையும் அலட்சியப் படுத்திப் பழக்கப்பட்ட நான்—.அப்பா சொன்ன இந்த விஷயத்தில் அப்படி நடந்திருக்கக் கூடாதுதான்.

ஏனெனில் நமது சமூகம் வேஷங்களுக்கும்— பொய் மரியாதைகளுக்கும் கௌரவம் கொடுத்தே பழக்கப்பட்டுப் போன ஒன்று......

—நாகை. பொன்னி

FREE E - BOOKS , www.thamizham.net.,

டால்ஸ்டாய் எப்பொழுதும் அயல் மொழி நாவல்களையே அதிகம் விரும்பிப் படிப்பார். முக்கியமாக ஆங்கில, பிரஞ்ச் மொழி நாவல்களில் ஆர்வம் அதிகம்.

அவருக்குப் பிடித்த ஆங்கில நாவலாசிரியர்கள்: டிக்கென்ஸ், தாக்கரே. இவர்களைத் தவிர எலியட், டிராலோப், ஹம்ப்ரிவார்டு, பிரைட்டன், பிராட்டன் ஆகியோரையும் பிடிக்கும். ஆனால் மற்ற எல்லோரையும்விட அவருக்கு டிக்கென்ஸிடம்தான் ஈடுபாடு அதிகம்.

பிரஞ்சு இலக்கியத்தில் விக்டர் ஹியூகோ, ஸோலா, மாபசான், ப்ளோபேர், டிராஸ், ஃபெலியர் ஆகியோர்களிடம் ஆர்வம் அதிகமாக உண்டு. மாபசானை விரும்பிப் படிப்பார். மற்றவர்களைப் படிப்பாரே தவிர விரும்பி உற்சாகத்துடன் படிப்பார் என்று சொல்ல முடியாது. விக்டர் ஹயூகோவின் ''லேமிஸரபிள்'' டால்ஸ்டாய்க்கு மிகவும் பிடித்தமான நூல்.

ஜெர்மன் நாவல்களைப் படிப்பதில் டால்ஸ்டாய் அதிக ஆர்வம் காட்டினார் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் கதே, ஆவர்பார், ஷில்லா ஆகியோரைப் படிக்க விரும்பினார்.

ருஷ்ய இலக்கியத்தில் துர்கெனிவ் எழுத்துக்களைப் படிப்பதில் அளவுகடந்த ஈடுபாடு. அதேபோல் செகாவின் சிறுகதைகளில் மிகுந்த ஈடுபாடு உண்டு. முக்கியமாக 'கண்மணி' என்கிற சிறுகதையை மிகவும் பாராட்டுவார். செகாவின் நாடகங்கள் பிடிக்காது.

புஷ்கினின் வசன நூல்களைப்பற்றி டால்ஸ்டாய்க்கு மிகநல்ல அபிப்ராயம் உண்டு. புஷ்கினின் நடை, அதன் வேகம், போக்கு அனைத்தும் அவருக்குப் பிடித்தமானவை. புஷ்கினின் நடையையே தான் முன்மாதிரியாகக் கொண்டதாகக் கூறுவார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பிடிக்காதது போலவே வால்டர் ஸ்காட் நாவல்களும் டால்ஸ்டாய்க்குப் பிடிக்காது.


குழந்தைகளுக்கென்று தனியாக எழுதும் நூல்களைக் கண்டால் டால்ஸ்டாய்க்கு வெறுப்பு.

அவருக்கு ஈடுபாடே இல்லாத துறை — கவிதை!

---

டால்ஸ்டாயின் மூத்தமகன் செர்ஜ்லியோவிச் டால்ஸ்டாய் எழுதிய குறிப்புக்களிலிருந்து...

FREE E - BOOKS , www.thamizham.net.,




**வேல் டைப்பௌண்டரி**

புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
எல்லா மொழி அச்செழுத்துக்கள்,
போஸ்டர் எழுத்துக்கள்
எல்லாவித அச்சக உபகரணங்கள்.

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7 போன்: 27087.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# கவிதைகள்

மின் விசிறிக்கும்
மின்சாரத்துக்கும்
தகராறு
இருவரில் யார்
பெரியவரென்று.

இதைப் பற்றி
காற்று
கவலைப்படவில்லை

●●

தரமான பத்திரிகைகளுக்கு
சென்று திரும்பிய
மோசமான கட்டுரை
யொன்று
இறுதியில் பிரசுரமானது:

பத்தாம் வகுப்புப்
பாடபுத்தகத்தில்

●●

திருமண விழாவிற்கு
தலைமை வகித்த
அரசியல்வாதி கூறினார்:

''இந்த தம்பதிகள்
இந்திய வறுமை மாதிரி
நீடுடி வாழ்க!''

பல்லி விழுந்த பலன்:
சாம்பார்
சாக்கடையில்.

●●

அரசியல் பேசாதீர்கள்
என்கிற
அறிவிப்புப் பலகையை
மாட்ட
உகந்த இடம்:
சட்டசபை.

●●

ஒரு கட்சி
தலைமையகத்தின்
பத்திரிகை விளம்பரம்:

தேர்தல் அறிக்கை
தயாரிப்பதற்கு
கற்பனை வளம் மிகுந்த
எழுத்தாளர்கள் தேவை

ஸ. ஜெ. சூர்யா.


திருச்சி நகரில் சுட்டியை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.
-சுட்டி மேலாளர்

சுட்டி - தொடர்பு முகவரி
AP - 638, H பிளாக் அண்ணா நகர்,
சென்னை-600 040.

| | | |
|---|---|---|
| சுட்டி | ஆண்டு சந்தா | ரூ 10 -00 |
| சந்தா | ஆயுள் சந்தா | ரூ 150 -00 |


FREE E - BOOKS , www.thamizham.net.,

## தெருவோரங்கள்

''கீரை... கீரை...''!
—அந்த வயதான தாயின் குரல் எங்கள் தெருவில் அடிக்கடி ஒலிக்கும். வயிற்றுப் பசி முதுமையின் முதுகிலே பாரமேற்றியிருப்பதைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கும்.

''ஏய் கீரை இங்கே வா,'' ஒரு வீட்டுப் பெண்மணி அழைக்கிறாள். தலையிலிருந்து கீரைச்சுமை படிக்கட்டில இறக்கி வைக்கப் படுகிறது.

''கட்டு என்ன விலை?''

! 60- காசும்மா''

''60காசா, அநியாயமா இருக்கே!''

''நாலுமைல் தூரத்திலிருந்து சுமந்து கொண்டு வாரேன் தாயே. ஆடுமாடு மேஞ்சுராம பாதுகாத்து' ராத்திரிப் பகலா கண்ணு முழுச்சு, தண்ணி எறெச்சு கஷ்டப்பட்டு வயித்துப் பொழப்புக்காக கொண்டு வாரேம்மா, அநியாங்கறீங்களே''.

''உங்கதையைக் கேட்க கூப்டலே, கட்டு நாப்பது காசுன்னா ரெண்டு கட்டு கொடு''

''அம்பது பைசா வைச்சுக்குடுங்க தாயே''

''நாப்பது தான்; இல்லேன்ன வேணடாம்'' நாற்பது காசு என்று விலை நிர்ணயமாகிறது.

''விமலா...,''—வீட்டிற்குள் இருக்கும் தன் மகளை அழைத்து ''அலமாரியிலே ரெண்டு ரூபா நாள் இருக்கு அதை எடுத்துக்கிட்டு வாம்மா''.

உள்ளேயிருந்து விமலா ''நேத்து, தம்பி பெப்ஸிகோலா கேட்டப்போ நீங்க தானே அந்த ரூபாய் எடுத்துக்கச் சொன்னீங்க; மறந்துட்டீங்களா?'' என்கிறாள் வேறு வழியாக 80காசுகள் கீரைக்காரியிடம் வந்து சேருகிறது.

'கீரை...கீரை...'' மீண்டும் சுமை தலைக்கேறுகிறது.

கீரைக்காரிக்கும் பெப்ஸிகோலாவிற்கும் உள்ள பொருளாதார முரண்பாடுகள் தான் என்னே? செருப்புத் தைப்பவனிடமும் கீரைக்காரியிடமும் 5 காசுக்கும் 10காசுக்கும் அடம்பிடிக்கும் நம் சமுதாய உணர்வுதான் என்னே! என்னே!

—பூங்கணியன்



ஒருவர்: என்னங்க! ஜெயிலுக்குள்ளே பயங்கரமான சிரிப்புச் சத்தம் கேட்குது?

அடுத்தவர்: அரசியல் ஜோக் எழுதி கைது ஆனவர் இங்கே வந்தும் எல்லோரையும் ஜோக்கடிச்சு சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

FREE E-BOOKS ,www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

மாலைமுரசு வெளியிட்ட குறிப்பிட்ட அந்தப் படம் ஆபாசமாகத்தான் இருந்தது என்று அடித்துச் சொல்லிவிட்டு, அதற்காக மட்டும் கைது செய்யப் படவில்லை என்று கருத்துத் தெரிவித்தது நேர்மையான உங்கள் குரலுக்கு ஒரு சான்று.

— பி. எல். பரமசிவம்
மதுரை - 1

சிறுகதையில் மந்திரி கிந்திரின்னு எழுதாதீங்க. அப்புறம் நீங்களும் கம்பி எண்ண வேண்டியது தான்.

— இரா. புவனேந்திரன்
திருவொற்றியூர்.

பாலச்சந்தரின் திரைப் பட யதார்த்தங்களின் முரண்பாட்டை அழகாக எடுத்துச் சொல்லி இருக் கிறார் கட்டுரையாசிரியர். விகடன் விவகாரம் பற்றி மாலன் கூறிய கருத்தை ஒற்றுமை இல்லாத பத்திரிகைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

— எம். சம்பத்.வேலாயுதம்
பாளயம்-639117.

அனேகமாக அடுத்து வரப்போகும் அரசியல் வாதிக்கு என்ன யோக்யதை தேவை என்பதை விளக்குகிறது 'பவுடர் முகங்கள்' நாடகம்.

— ஆர். பரமேசுவரன்.
மகாராஷ்ட்ரம் - 401201

'நாளைய பொழுதாவது நம் பக்கம் விடியாதா' என்று ஏங்கும் அட்டைப் பட பெண்ணின் நியாயமான ஆதங்கமும், அதற்கு பொருத்தமான சுந்தர ராமசாமியின் நிதர்சமான கருத்துக்களும் மே மாத சுட்டியை பெண்கள் சிறப்பிதழோ என்று நினைக்க வைக்கிறது.

—அமுதா இளங்கோவன்
பாண்டி-3

பெண்களுக்கு செல்வி என்ற அடைமொழிகளை நீக்க வேண்டும். இன்குலாப்பிற்கு 'கவிஞர்' என்ற அடைமொழி தந்திருக்கிற அதே வேளையில் பேச்சாளர் அருள் மொழி என்று போட்டு இருக்கலாமே! அதை விடுத்து பெண் என்பதற்காக செல்வி என்று ஏன் போட வேண்டும்?

— தங்க உமாசங்கர்,
சட்டக் கல்லூரி மாணவர்
சென்னை.

கலைக் களஞ்சியம், பேரகராதி, பாடங்களுக்கான தொகுப்பு அகராதிகள் தயாரிக்க இடம், பொருள், புத்தக உதவி செய்யும் ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்க: M. வெங்கட், 27-பி, திருவள்ளுவர் தெரு கிராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600053. ADVT.



FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS(N)/317


# சக்தி சுகர்ஸ் லிமிடெட்

# SAKTHI SUGARS LIMITED

## கிராமப்புற வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்கள்

தமிழ்நாடு பெரியார் மாவட்டத்தில் உள்ள 400 கிராமங்களில் சுமார் 150 லட்சம் மக்களுக்கு உறுதுணையாக சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஏராளமான கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை ஏற்று முடித்துள்ளது. பல்வேறு கிராமப்புற வளர்ச்சிப் பணிகளுக்காக சக்தி சுகர்ஸ் ரூ. 210 லட்சம் செலவு செய்துள்ளது.

**1. சக்தி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி**

சக்தி நகரில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு (நவீன தொழில் நுட்பக் கல்வி நிலையத்தை) பாலிடெக்னிக் நிறுவி அது 10-9-81 முதல் சக்தி நகரில் செயல்பட்டு வருகின்றது. இந்த கல்வி நிறுவனத்தில் டிப்ளமோ பட்டப் படிப்பு வரை கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 200 லட்சம். வருடம் 200 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**2. சக்தி உயர்நிலைப்பள்ளி, சக்தி ஆரம்ப பள்ளி**

சக்தி ஆரம்பப் பள்ளி 1966ம் ஆண்டும் சக்தி உயர் நிலைப்பள்ளி 1970ம் ஆண்டும் நிறுவப்பட்டன, கிராமப் புறத்தின் சுமார் 1100 குழந்தைகள் இந்தப் பள்ளி மூலம் பயன் பெறுகின்றனர். இது ரூ. 30 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

**3. வி. எம். கைலாசம் மருத்துவமனை, சக்தி நகர்**

கிராமப் பகுதியிலுள்ள மக்களின் சேவையைக் கருத்தில் கொண்டு எக்ஸ்ரே யூனிட்டுகள் மற்றும் ஆப்ரேஷன் தியேட்டர் ஆகிய வசதிகளுடன் கூடிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ரூ. 60 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

**4. சாலை அபிவிருத்தி திட்டங்கள்**

கிராமப் பகுதிகளுக்கும், விளை நிலங்களுக்கும் இடையே சாலைப் போக்குவரத்து ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகள் உரம் மற்றும் விளை பொருட்களை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலம் எடுத்துச் செல்ல உதவி புரிகின்றது.

**தலைமை அலுவலகம் :**
180, ரேஸ் கோர்ஸ் ரோடு,
கோயமுத்தூர்-641 018.

**பதிவு அலுவலகம் &**
**தொழிற்சாலை**
சக்தி நகர்-638 315
ஈரோடு ஆர்.எம்.எஸ்.


http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்களம்
FREE E - BOOKS , www.thamizham.net..